மாலை முரசு

பக்கங்கள் 21+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 13 சனிக்கிழமை 29.11.2025 | அதிர்வு 123

## அவசரகாலம் அமுல்

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும், பொது வாழ்க்கையை நிலைநிறுத்த அத்தியாவசிய உணவுப் பொருகள் மற்றும் சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்கும் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. 04▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# நூறுக்கும் அதிகமானோர் மண்சரிவால் மட்டும் பலி!

### காணாமற்போனோர் எண்ணிக்கை அதிலும் அதிகம்

நாட்டைப் புரட்டிப் போட்ட புயலின் தாக்கத்தில் நாடு முழுவதிலும் உயிரிழப்புக்கள் அதிகரித்து வருகின்றன. புயல் முடிவற்ற பின்னரும் அதன் தொடர் தாக்கமாக ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் நாடு முழுவதிலும் பல பாகங்களிலும் அடுத்தடுத்து மண் சரிவுகள் ஏற்பட்ட வண்ணமுள்ளன. இந்த மண்சரிவுகளினால் ஏற்படும் உயிரிழப்புக்கள் பற்றிய முதல் தகவல்களும் தொடர்ந்து கிடைத்து வருகின்றன. இதுவரையில் நூற்றுக்கும் அதிகமானோர் மண்சரிவுகளுக்கு மட்டும் பலியாகி உள்ளனர். அதிலும் விட அதிகமானோர் மண் சரிவுகளில் சிக்கிக் காணாமல் போயுள்ளனர். இப்படிக் காணாமல் போன பலரும் மண்ணோடு மண்ணாகி உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. 04▶

# இதுவரை 132 பேர் பலி; 176 பேரைக் காணோம்!

### ஆறரை லட்சம் பேருக்குப் பாதிப்பு

நாட்டைப் பாதித்துள்ள தீவிரமான வானிலை மற்றும் அனர்த்தங்களினால் இதுவரை 132 பேர் உயிரிழந்துள்ளமையுடன் மேலும் 176 பேர் காணாமல் போயுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இன்று பிற்பகல் 2 மணிவரையான தகவல்களின்படி, நாடு முழுவதும் 179,868 குடும்பங்களைச் சேர்ந்த 646,567 பேர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 04▶










# 80 பேர் கொண்ட இந்திய மீட்புக் குழு உபகரணங்களுடன் விரைந்து வந்தது

## பயிற்சி பெற்ற நான்கு நாய்களும் வந்தன

இலங்கையை பாதித்த கடுமையான வானிலைக்கு மத்தியில், அவசர மற்றும் நிவாரணப் பணிகளுக்கு உதவுவதற்காக இந்திய மீட்புக் குழு இன்று காலை இலங்கைக்கு வந்தது.

இந்திய விமானம் மூலம் வந்த இந்தக் குழுவில், நான்கு பெண்கள் மற்றும் 76 ஆண்கள் உட்பட 80 பணியாளர்கள் உள்ளனர். மற்றும் நான்கு பயிற்சி பெற்ற மீட்பு நாய்களும் வந்துள்ளன.

வெள்ளம், நிலச்சரிவுகள் மற்றும் வானிலை தொடர்பான பிற அவசர நிலைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர தேடல் மற்றும் மீட்பு முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அவர்கள் சிறப்பு பேரிடர் நிவாரண உபகரணங்களை தங்களுடன் கொண்டு வந்துள்ளனர்.

இலங்கை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து இந்தக் குழு உடனடியாக நடவடிக்கைகளைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று காலை இந்தியாவிலிருந்து சுமார் 12 தொன் மனிதாபிமான உதவிகளை ஏற்றிக் கொண்டு ஊ-130து விமானம் கொழும்பு வந்து சேர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.





# இந்திய உதவிப் பொருள்கள் வந்தன

நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக இந்திய நிவாரண உதவி விமானம் இலங்கை வந்தடைந்தது.

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்க நிவாரண பொருட்களை ஏற்றிச் வந்த இந்திய விமானப்படையின் ஊ-130 விமானம் இன்று அதிகாலை 01.45 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்திய அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட சுகாதாரப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்ட உதவிப் பொருள்களை பெற, இந்திய உயர் ஸ்தானிகரகத்தைச் சேர்ந்த ஆலோசகர் (வளர்ச்சி ஒத்துழைப்பு) மைத்ரே குல்கர்னி மற்றும் உதவி பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் மன்தீப் சிங் நேகி உள்ளிட்ட இந்திய விமானப்படை அதிகாரிகள் குழுவும், இலங்கை விமானப்படையின் தலைமைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் லசித சுமனவீர உள்ளிட்ட விமானப்படை அதிகாரிகள் குழுவும் வருகை தந்தனர்.அங்கு இந்திய நீவாரணப் பொருள்கள் இலங்கை அதிகாரிகளினால் பொறுப் பேறகப்பட்டன.









# முதியோர் இல்லத்தில் 11 வயோதிபர்கள் சாவு

பன்னலவில் அமைந்துள்ள முதியோர் இல்லம் வெள்ளத்தில் மூழ்கி, குறைந்தது 11 முதியோர் உயிரிழந்தனர்.

அதிகரித்த வெள்ளப்பெருக்குக் காரணமாக அந்த இடம் துண்டிக்கப்பட்ட நிலையில் இந்த அவலம் நேர்ந்துளது.

உள்ளூர் அதிகாரிகளின் தகவலின்படி, தொடர்ச்சியான கனமழையைத் தொடர்ந்து அந்த இல்லம் விரைவாக நீரில் மூழ்கியது. இதனால் பலர் உள்ளே சிக்கித் தவித்தனர்.

மோசமான வானிலை நிலைமைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கடினமான மீட்பு நடவடிக்கையின் போது அவசரகால மீட்புப் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் 14 நபர்களை மீட்டனர்.





## நூறுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி, மல்லவப்பிட்டி, கெட்டுவான, குருநாகல், மாவதகம மற்றும் கொத்மலைள உள்ளிட்ட பல பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியான கனமழை நிலத்தில் கடுமையான உறுதியற்ற தன்மையை ஏற்படுத்துகிறது. இதனால் மண்சரிவுகள் இடம்பெறுகின்றன.

நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்ட பல இடங்களிலும் காணாமல் போனவர்களைத் தேடும் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என உள்ளூர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். சவாலான அணுகல் நிலைமைகள் இருந்த போதிலும், பொலிஸ் குழுக்கள், பேரிடர் மேலாண்மை மையம் மற்றும் இராணுவத்தின் மீட்புக் குழுக்கள் தொடர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

அதிக ஆபத்துள்ள மற்றும் உயரமான பகுதிகளில் வசிப்பவர்கள், தொடர்ச்சியான மழை காரணமாக மேலும் நிலச்சரிவுகள் ஏற்படும் அபாயம் இருப்பதால், விழிப்புடன் இருக்குமாறு கடுமையாக வலியுறுத்தப்பட்டுள்ளனர். விரிசல்கள், அசாதாரண நில அசைவு அல்லது திடீர் நீர் கசிவு காணப்பட்டால் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மண்சரிவுகள் தொடர்பில் முற்கொண்டு கிடைத்த தகவல்கள் வருமாறு:-

ஈ கொத்மலையின் ரம்பொட பகுதியில் ஏற்பட்ட திடீர் நிலச்சரிவில் 15 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் இன்று காலையில் தெரிவித்தனர்.

சுமார் 50 பேர் காயமடைந்து கொத்மலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சுமார் 4 கிலோமீட்டர் பரப்பளவில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

கொத்மலை மாவட்டத்தின் பிராந்திய செயலகம், ரம்போடகலவிற்குள் நுழையும் அனைத்து சாலைகளும் தற்போது அடைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது, இதனால் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தடைப்பட்டுள்ளன.

■ குருநாகல் - அலவ்வ பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த மண்சரிவில் சிக்கி சுமார் 22 பேர் காணாமல்போயுள்ளனர் எனக் கூறப்படுகிறது. மண்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

■ கேகாலை - துலிஹிரியாவின் மன்ரோவியா தோட்ட பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. நிலச்சரிவில் 20 பேர் காணாமல் போயுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

■ கண்டி மாவட்டம் ஹரிஸ்பத்துவ அலவதுகொட பொலிஸ் பிரிவின் அங்கும்புர பகுதியில் இன்று அதிகாலை 1.30 மணியளவில் பெரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அங்கும்புர - அலவது கொட வீதியில் ரம்புக் எல, கல்கொட்டுவ பகுதியில் இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிலச்சரிவு காரணமாக இடம்பெயர்வு மற்றும் உயிர் இழப்புகள் ஏற்பட்டன எனத் தகவல்கள் வந்தாலும், இதுவரை அது பற்றிய எண்ணிக்கை விவரம் வரவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்தில் சுமார் 800 குடும்பங்கள் வசித்து வந்தன. அவர்களில் பெரும்பாலானோர் இப்போது காணாமல் போயுள்ளனர் என முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மண்சரிவு ஏற்பட்ட பகுதியில் நிலத்தின் நிலைமை மிகவும் அமைதியற்றதும் ஆபத்தானதுமாக இருப்பதால் மீட்புக் குழுக்கள் அந்தப் பகுதிக்கு செல்ல முடியவில்லை.

அங்கு குறைந்தது 40 பேர் காணாமல் போயுள்ளனர் என ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்தும் சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுவதால் அந்தப் பிரதேசங்களை அணுகுவதில் மிகுந்த சிரமம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

■ கண்டி, அரநாயக்க, அம்பலாங்கந்தை 120 பேர் வரைக் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களில் 20 குழந்தைகளும் அடங்குகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மண்சரிவு காரணமாக சிக்கியுள்ளவர்களை மீட்பதில் சிரமம் காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

■ வெலிமடை - கெப்பெட்டிப்பொல பொலிஸ் நிலையத்திற்கு அருகில் ஏற்பட்ட மண்சரிவில் தற்போது வரையில் இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்பு பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மண்சரிவு காரணமாக வெலிமடை - நுவரெலியா வீதியின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து காணமல் போனவர்களைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

■ பதுளை - பிபிலை பிரதான வீதியில் உள்ள சுவீண்டன் பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது. இதனால் அந்த வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே, அப்பகுதியில் பயணம் செய்யும் சாரதிகள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

■ நுவரெலியாவின் பூண்டுலோயா பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அந்தப் பகுதியின் மீட்புப் பணிக்காக, இலங்கை இராணுவத்தின் ஒரு குழுவினர் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர் என நுவரெலியா மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

## இதுவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனர்த்தம் காரணமாக அதிகளவில் கண்டி மாவட்டத்தில் 52 பேர் உயிரிழந்துள்ளமையுடன் 105 பேர் காணாமல் போயுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் 35 பேர் உயிரிழந்துள்ளமையுடன் 27 பேர் காணாமல் போயுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் 9 பேரும் மாத்தளை மாவட்டத்தில் எட்டு பேரும் குருநாகல் மாவட்டத்தில் 7 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் 6 பேரும் உயிரிழந்துள்ளமையுடன் பலர் காணாமல் போயுள்ளனர்.

மண் சரிவுகளால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் பற்றிய எண்ணிக்கை இன்னும் சரிவரக் கிடைக்காதமை காரணமாக உயிரிழப்புக்கள் பற்றிய சரியான தகவல் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இப்போது வெளியிடப்படும் உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களில் குறிப்பிடப்படும் எண்ணிக்கைகளை விட உயிரிழந்தோர், காயமடைந்தோர் மற்றும் பாதிக்கப்பட்டோரின் உண்மையான எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளத்தினால் சூழப்பட்டு, சிக்குப்பட்டிருக்கும் மக்களை மீட்கும் நடவடிக்கைகள் மும்முரமாக இடம் பெற்று வருகின்றன. கடற்படையினர் படகுகள் மூலமும், விமானப்படையினர் ஹெலிகள் மற்றும் பிற வழிகள் மூலமும் சிக்குண்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும், ஒவ்வொரு பக்கங்களிலிருந்தும், பாதுகாப்பாக மீட்டெடுக்கப்படுவோர் பற்றிய விவரங்களை விமானப்படை, கடற்படை போன்ற தரப்பினரும், பொலிஸார் மற்றும் மாவட்ட செயலகத் தரப்புகளும் தொடர்ந்து வெளியிட்ட வண்ணம் உள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆபத்தான கட்டத்திலிருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டு வருகின்றனர் என்ற நிம்மதி தரும் செய்தி வெளிவந்த வண்ணம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## அவசரகாலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் செயலாளர் சனத் நந்தித குமநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# வெள்ளத்தில் மூழ்குகின்றது ஜா - எல

கொழும்புக்கு அருகில், கம்பஹாவிக் ஜா – எல பகுதி வெள்ள நீரினால் மூழ்க ஆரம்பித்துள்ளது.

ஜா – எல, வெலிகம்பிட்டிய ஆகிய பகுதிகளே இவ்வாறு நீரில் மூழ்க ஆரம்பித்துள்ளன. வெள்ளம் காரணமாக அப்பகுதி மக்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு கோரப்பட்டுள்ளது.

களனி ஆற்றின் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும், கொழும்பு – நீர்கொழும்பு பிரதான வீதியில் ஜா–எல பாலத்தில் வெடிப்புகள் ஏற்பட்டிருப்பதால் அதனூடாக ஒருவழிப் போக்குவரத்து மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றது.











# இலங்கைக்கு 50,000 அமெரிக்க டொலர் நிவாரண உதவியை அறிவித்த மாலைதீவு

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு மாலைதீவு நிவாரணங்களை அறிவித்துள்ளது.

இதன்படி, 50,000 அமெரிக்க டொலர் நிதி உதவி மற்றும் டுனா மீன்ரின்களைக் கொண்ட 25,000 பெட்டிகளை நன்கொடை நிவாரண உதவியாக வழங்க மாலைதீவு அரசாங்கம் முன்வந்துள்ளது.

டிட்வா சூறாவளியால் இலங்கை பேரிடர்களை எதிர்கொண்டுள்ள நிலையில் மாலைதீவு மக்களின் சார்பாக மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகளை இலங்கை மக்களுக்கு வழங்க அந்த நாட்டு அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கை நெருங்கிய அண்டை நாடு மற்றும் நட்பு இலங்கை மக்களுடனான ஒற்றுமையின் நிரூபணம் என மாலைதீவு வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நன்கொடை, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பங்களிக்கும் என மாலைதீவு நம்புகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இரு நாடுகளுக்கும் அவர்களின் மக்களுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளப்படும் நெருங்கிய பிணைப்புகளுக்கான ஆழமான அர்ப்பணிப்பை இந்த நிவாரண உதவி பிரதிபலிப்பதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இடுக்கண் களையும் நட்பு

''உடுக்கை இழந்தவன் கைபோல
ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''
- என்றான் செந்நாப் போதகன் திருவள்ளுவப் பெருந்தகை.

ஒரு நண்பனுக்குத் துன்பம் ஏற்படும்போது, அவன் கேட்காமலேயே உடனடியாக விரைந்து சென்று துன்பத்தைப் போக்குவதே உண்மையான நட்பு என்பது இதன் அர்த்தம்.

நமது இலங்கை தீவு இயற்கைச் சீற்றத்தின் பேரிடரை எதிர்கொண்டு அனர்த்தங்களை சமாளிக்க முடியாமல் தடுமாறும் இந்தச் சமயத்தில் அயலில் மூத்த சகோதரன் போல இருக்கும் இந்திய உபகண்டம் வள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டமை போல உண்மையான நட்போடு விரைந்து உதவிக்கரம் நீட்ட முன் வந்திருப்பது இந்தச் சமயத்தில் நன்றியோடு நினைவு கூரப்பட வேண்டிய விடயமாகும்.

இலங்கை இயற்கைச் சீற்றத்தை எதிர்கொண்டு தடுமாறிக் கொண்டிருந்த சமயத்திலேயே இந்திய பிரதமர் மோடி தமது எக்ஸ் தளத்தில் தன்னுடைய ஆதரவு கரங்களை இலங்கைக்கு நீட்டி விரைந்து செய்தியை விடுத்தார்.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவ இந்தியா தயாராக உள்ளதென அவர் உறுதி மொழி வழங்கினார்.

''டித்வா சூறாவளியால் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த இலங்கை மக்களுக்கு எனது மனமார்ந்த இரங்கல்கள். பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களின் பாதுகாப்பு, ஆறுதல் மற்றும் விரைவான மீட்சிக்காக நான் பிரார்த்திக்கிறேன். ஒபரேஷன் சாகர் பந்துவின் கீழ் நிவாரணப் பொருள்கள், மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண ஆதரவு அவசரமாக அனுப்பப்பட்டுள்ளன. நிலைமை தீவிரமடைந்தால் மேலும் உதவி மற்றும் நிவாரணங்களை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை கொள்கை மற்றும் தொலைநோக்கு பார்வை மஹாசாகர் வழிகாட்டுதலின் கீழ், இந்தியா தேவைப்படும் நேரத்தில் இலங்கையுடன் தொடர்ந்து உறுதியாக நிற்கிறது'' எனப் பிரதமர் மோடி பதிவிட்டிருந்தார்.

இதற்கிடையில் நிவாரணப் பணிகளுக்கு உதவுவதற்காக இந்திய மீட்புக் குழு இன்று காலை இலங்கைக்கு வந்தது. இந்திய விமானத்தில் வந்த இந்தக் குழுவில் 76 ஆண்கள் மற்றும் நான்கு பெண்கள் உள்ளனர், மேலும் நான்கு மீட்பு நாய்களும் உடன் வந்தன. மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் உதவுவதற்காக அத்தியாவசிய பேரிடர் நிவாரண உபகரணங்களையும் அவர்கள் கொண்டு வந்துள்ளனர் என்பதும் முக்கிய விடயம். இலங்கைத் தீவு முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைந்து உதவுவதில் அதிகாரிகளுக்கு விரைவாக ஆதரவளிப்பதே இந்தியக் குழுவின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், தற்போது கொழும்பில் உள்ள இந்திய விமானம் தாங்கி கப்பலான ஐ.என்.எஸ். விக்ராந்தில் உள்ள 8 ஹெலிகள் மற்றும் விமானங்களை இலங்கையில் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளுக்கு வழங்க இந்தியா முன்வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தக்க சமயத்தில் அயல்தேசத்தின் உரிமையுடன் கூடிய நல்லுதவிகளை நன்றியுடன் இலங்கை மக்கள் நினைவில் நிறுத்துவர்.

# யாழில் நாலாயிரம் பேருக்குப் பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக 1,297 குடும்பங்களைச் சேர்ந்த 4,140 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா நேற்று மாலை தெரிவித்தார்.

24ம் திகதி முதல் நேற்று மாலை ஆறு மணி வரையிலான நிலைவரப்படி யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு இதனை அறிக்கையிட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகஒ பிரிவில் 311 குடும்பங்களைச் சேர்ந்த 1014 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் 240 குடும்பங்களைச் சேர்ந்த 795 பேரும், சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் 224 குடும்பங்களைச் சேர்ந்த 725 பேரும், நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் 139 குடும்பங்களைச் சேர்ந்த 403 பேரும், வேலணை பிரதேச செயலகப் பிரிவில் 64 குடும்பங்களைச் சேர்ந்த 229 பேரும் பாதிக்கப்பட்டனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 194 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 176 பேரும், மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 151 பேரும், காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 138 பேரும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் 31 குடும்பங்களைச் சேர்ந்த 109 பேரும், யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 106 பேரும் பாதிக்கப்பட்டனர்.

கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 31 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேரும், நல்லூர் பிரதேச செயலக பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேரும், ஊர்காவற்துறை பிரதேச செயலக பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும், கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் பாதிக்கப்பட்டனர் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 85 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்தது.

ஐந்து தற்காலிக தங்குமிடங்களில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 106 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# பஸ், வீட்டின் கூரையில் 29 மணி நேரம் தஞ்சம் புகுந்த 67 பேர் பத்திரமாக மீட்பு!

அநுராதபுரம் - புத்தளம் சாலையில் உள்ள கலாவெவ பாலத்தில் வெள்ளத்தில் சிக்கிய பஸ்ஸில் இருந்த வெளிநாட்டுப் பெண் உட்பட 67 பயணிகளையும் 29 மணி நேரத்தின் பின்னர் பாதுகாப்புப் படையினர் வெற்றிகரமாக மீட்டுள்ளனர் என இலங்கைக் கடற்படைச் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தினார்.

பஸ்ஸின் கூரையிலும் பின்னர் அருகில் இருந்த வீட்டின் கூரையிலும் ஒரு முழுநாளுக்கு மேல் மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த இந்தப் பயணிகள் ஒருவாறு பத்திரமாக மீட்கப்பட்டனர்.

சுமார் 70 பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றே வெள்ளப்பெருக்கு காரணமாக பாலத்தில் சிக்கிக் கொண்டது.

இந்த மீட்பு நடவடிக்கையின் நேரடிக் காட்சிகளை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இன்று அதிகாலை கண்காணித்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பயணிகளை மீட்கும் நடவடிக்கையை கடற்படையே முன்னெடுத்தது.

புல்மோட்டையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ், தொடர்ந்து வெள்ளத்தில் பயணிக்க வேண்டாம் என அநுராதபுரத்தில் வழங்கப்பட்ட எச்சரிக்கைகளை மீறிச் சென்று இடையில் பாலம் ஒன்றில் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டதாகத் தெரிகின்றது.

"பயணிகள் ஓட்டுநரை மேலும் செல்ல வேண்டாம் என்று வலியுறுத்தினர். ஆனால் அவர்களின் வலியுறுத்தல்கள் புறக்கணிக்கப்பட்டன"" என்று உயிர் பிழைத்தவர்களில் ஒருவர் தெரிவித்தார்.

நீர்மட்டம் உயர்ந்ததால் பஸ் இறுதியில் நின்றது. பயணிகள் கூரையில் பாதுகாப்பு தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மூன்று கடற்படை வீரர்கள் பஸ்ஸை அடைந்து, அந்தப் பயணிகளை பஸ்ஸின் கூரையில் ஏற உதவினார்கள். பின்னர் வெள்ளத்துக்கு மத்தியில் அருகில் உள்ள வீட்டின் உச்சிக்கு அவர்கள் மாற்றப்பட்டனர்.

"காலை வரை 29 மணி நேரம் நாங்கள் அந்தக் கூரையில் சிக்கிக் கொண்டோம்" என்று உயிர் பிழைத்தவர் கூறினார்.

அந்த நேரத்தில் பேருந்தில் சுமார் 70 பேர் இருந்தனர் என அவர் குறிப்பிட்டார்.

"ஒரு கட்டத்தில், மூன்று பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். ஆனால் பின்னர் அவர்கள் மீட்கப்பட்டனர்" - என கினிகத்தேனையைச் சேர்ந்த உயிர் பிழைத்தவர் நினைவு கூர்ந்தார்.

ஹெலிக்கொப்டர்களால் ஏற்பட்ட காற்றின் கொந்தளிப்பால் மீட்புப் பணிகள் சிக்கலானதாக இருந்தன. அப்படிச் செய்தால் ஹெலியின் அதிர்வு மற்றும் காற்றினால் பயணிகள் தஞ்சம் புகுந்திருந்த ஆஸ்பெஸ்டாஸ் கூரை உடையக்கூடிய ஆபத்தும் இருந்தது. அது பயணிகளை நீரில் தள்ளும் அபாயத்தை ஏற்படுத்தும் என்பதால் ஹெலி மூலம் மீட்கும் முயற்சி கைவிடப்பட்டது.

அதனால் இறுதியில் படகுகள் மூலம் மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மீட்புப் படகுகள் குழுவை அடைய அதிக நேரம் எடுத்தது என்று கூறப்பட்டது.

மீட்கப்பட்ட அனைத்துப் பயணிகளும் நொச்சியாகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மீட்கப்பட்டவர்களில் ஒருவர் நீதிபதியாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் நிவாரணப் பொருள்களுடன் மற்றுமொரு கப்பல் நாளை திருமலைக்கு!

## வடக்கு, கிழக்கு விநியோகத்துக்கு வசதியாக

**(ந.லோகதயாளன்)**

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கான இந்திய நிவாரணப் பொருள்களைக் கொண்ட அந்த நாட்டின் கப்பல் ஒன்று நாளை திருகோணமலை துறைமுகத்திற்கு வருகின்றது.

இலங்கையில் நிலவும் சீரற்ற கால நிலையால் பாதிப்படைந்த மக்களுக்கான நிவாரணங்கள், கொழும்புத் துறைமுகத்தின் மூலம் ஒரு கப்பலிலும், விமானம் மூலமாக இரண்டு தடவைகளும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டன.

இவ்வாறு கொழும்பின் ஊடாக வழங்கப்பட்ட பொருள்களை வடக்கு, கிழக்குப் பகுதிகளிற்கு எடுத்துச் செல்வ தற்கு வீதிகள் சீரின்மை காரணமாக பெரும் நெருக்கடி எதிர்கொள்ளப்ப டுகின்றது.

இதன் காரணமாகவே இந்திய அரசின் அடுத்த கட்ட உதவிக் கப்பல் நாளை 30 ஆம் திகதி திருகோணமலைக்கு அனுப்பப்படுகின்றது.

திருகோணமலைத் துறைமுகத்திற்கு நேரடியாக எடுத்து வந்து இறக்கப்படும் பொருள்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு நேரடியாக விநியோகிக்கப்படவுள்ளன.

இந்த விநியோக ஏற்பாட்டிற்காக இந்திய அதிகாரிகள் சிலர் திருகோணமலைக்குப் பயணித்துள்ளனர் என அறியப்படுகின்றது.

# மன்னார் - யாழ். வீதி முற்றாக வெள்ளத்தில்

## பயணங்களைத் தவிர்க்க அறிவுறுத்தல்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மல்வத்து ஓயாவின் ஆற்று வெள்ளம் மன்னார் மாவட்டத்தின் அநேக இடங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்துள்ளார்.



இந்நிலைமையால் ஏ-32 வீதி மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம் வரை செல்லும் வீதி முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இந்த வீதியூடாக பெரிய மற்றும் சிறிய வாகனங்களில் பயணம் செய்வதை முற்றாக தவிர்க்குமாறு பயணிகள் மற்றும் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எனவே பாதுகாப்பை கருத்தில் கொண்டு தேவையற்ற பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கிண்ணியாவில் இளைஞன் ஒருவன் கோடரியால் தாக்கப்பட்டுக் கொலை!

திருகோணமலையில் கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சமச்சதீவு பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கோடரியால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனக் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கிண்ணியா, சமச்சதீவைச் சேர்ந்த 28 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இவர் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது, வீட்டிற்குள் நுழைந்த இனந்தெரியாத சிலர் அவரைக் கோடரியால் தாக்கினர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கோடரியுடன் இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். சடலம் கிண்ணியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# மல்வத்து ஓயா பகுதிகளுக்கான வெள்ள அபாய எச்சரிக்கை நீடிப்பு

மல்வத்து ஓயாவை அண்டிய தாழ் நிலப் பகுதிகளுக்கு விடுக்கப்பட்டிருந்த வெள்ள அபாய எச்சரிக்கை நீடிக்கப் பட்டுள்ளது.

அதன்படி, இந்த வெள்ள அபாயம் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, மல்வத்து ஓயாவை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் தொடர்ந்து மிகுந்த விழிப்புடனும் பாதுகாப்பாகவும் இருக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

# கொழும்புக்கான நீர் விநியோகம் பாதிப்படையலாம் என எச்சரிக்கை



நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் பல நீர் மூலங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் நீரில் மூழ்கியுள்ளன என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

குறிப்பாக கண்டி மாவட்டத்தில் உள்ள நிலையங்கள் முற்றிலும் செயலிழந்துள்ளன.

கேகாலை, மாவனெல்ல, வட மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளிலும் நீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேல் மாகாணத்தின் களனி ஆற்றின் நீர் மட்டம் 7 அடி ஆக அதிகரித்தால், அம்பத்தலே சுத்திகரிப்பு நிலையம் சவாலை சந்தித்து கொழும்புக்கான நீர் விநியோகம் பாதிக்கப்படலாம் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் சந்தன பண்டார எச்சரித்துள்ளார்.

# மன்னார் எல்லைக் கிராமத்தில் சிக்கியுள்ள 70 குடும்பங்களை மீட்க செயலகம் முயற்சி

## விமானப் படை மற்றும் கடற்படை உதவியுடன்

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தின் எல்லைக் கிராம் ஒன்றில் வெள்ளம் சூழப்பட்ட நிலையில் நடுவில் மாட்டிக் கொண்டுள்ள 70 குடும்பங்களை மீட்க விமானப் படையினரின் உதவி கோரப்பட்டுள் ளது.

மன்னார் மாவட்டம் மற்றும் முல் லைத்தீவு மாவட்டங்களின் எல்லைக் கிராமமாக காணப்படும் சீது விநாயகபுரம் கிராமத்திற்கான இரு பக்க வீதிகளையும் மூடு வெள்ளம் அதிகளவில் பாய்ந்து வருவதனால் சீதுவிநாயகபுரம் கிராமத்தில் வாழும் 70 குடும்பங்களும் தனித்து விடப்பட்டுள்ளன. இவர்களை மீட்பதற் கான உதவி கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிப ரான கனகேஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

இது தொடர்பான விவரம் கிடைக்கப் பெற்று அவர்களை மீட்க விமானப் படையினரின் உதவியை நாடியுள்ளோம். விமானப்படையினர் அதற்காக ஒரு ஹெலிக்கொப்டரைத் தயார் செய்தபோதும் அப்பகுதியில் நிலவும் கால நிலை சீர்கேட்டினால் அதனையும் பயன்படுத்த முடியாமல் உள்ளது.

இருந்தபோதும் தற்போது கடற்படை யினரின் படகுகள் மூலம் அவர்களை மீட்பதற்கும் முயற்சிக்கப்படுகின்றது இரு வழிகளில் ஒன்றைப் பயன்படுத்தி அவர் கள் பத்திரமாக மீட்கப்படுவார்கள். – என்றார்.



# சரிந்து வீழ்ந்த மண் மேட்டை அகற்றச் சென்று அனர்த்தத்தில் சிக்கிக் கொண்ட தொழிலாளர்கள்

வெலிமடை – நுவரெலியா பிரதான வீதியின் கவரம்மன பகுதியில் வீதியில் சரிந்து விழுந்த மண் மேட்டை அகற்றச் சென்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் குழு வொன்று விபத்தில் சிக்கியுள்ளது.

மண் மேட்டை அகற்றும் பணி நடைபெற்றுக் கொண்டி ருந்தபோது, அதன் மேலே இருந்த ஓர் அணை மீண்டும் ஒரு மரத்துடன் சேர்ந்து சாலையில் சரிந்ததாகத் தெரிவிக் கப்படுகிறது. சம்பவ இடத்தில் இருந்த ஒரு வாகன சாரதியை தற்போது காண வில்லை என்றும், அதே நேரத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் குழுவினால் மண் மேட்டின் கீழ் புதைந்திருந்த ஒரு தொழிலாளியை மீட்க முடிந்ததாக மீட்புக்குழு தெரிவித்துள்ளது.

# திருமலை மாவட்டத்தில் மட்டும் 32 ஆயிரம் பேருக்குப் பாதிப்பு!

(ஏ.எச். ஹஸ்பர்)

சீரற்ற கால நிலை மற்றும் "டித்வா" புயல் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 10,214 குடும்பங்களை சேர்ந்த 31,634 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரி வித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலக பிரிவை உள்ளடக்கிய 182 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து இன்று காலை 8.00 மணி வரையான தகவலின் அடிப்படையில் வெளியிட்ட அறிக்கையில் இந்த விவரம் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதில் 294 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 9602 குடும்பங்களை சேர்ந்த 29,809 பேர் உறவினர்கள் மற்றும் சொந்த வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.14 பாதுகாப் பான தற்காலிக முகாம்களில் 612 குடும்பங்களை சேர்ந்த 1825 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் 360 குடும்பங் களைச் சேர்ந்த 1,056 பேரும், தம்பல காமத்தில் 369 குடும்பங்களைச் சேர்ந்த 1.149 பேரும், மொறவெவவில் 105 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேரும், சேருவிலவில் 173 குடும்பங்களை சேர்ந்த 582 பேரும், வெருகலில் 398 குடும்பங் களைச் சேர்ந்த 1,272 பேரும், மூதூ ரிக் 4,024 குடும்பங்களைச் சேர்ந்த 11,754 பேரும்,கிண்ணியாவிக் 2,375 குடும்பங்களைச் சேர்ந்த 7,763 பேரும், கோமரங்கடவலவில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேரும் , பதவிசிறிபுரவில் 371 குடும்பங்களைச் சேர்ந்த 1,187 பேரும், குச்சவெளியிக் 1,795 குடும்பங் களை சேர்ந்த 5720 பேரும், கந்தளாயில் 203 குடும்பங்களைச் சேர்ந்த 710 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.





# டித்வா புயல், மழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ன?

## அமைச்சர் ராமச்சந்திரன் விளக்கம்

மழையால் இதுவரை மிகப்பெரிய பாதிப்பு இல்லை. புயல் கரையை கடக்கும் வரை வெளியே வரவேண்டாம் என்ற முதல்வரின் அறிவுரையைப் பின்பற்ற வேண்டும் என அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"மழையால் இதுவரை மிகப்பெரிய பாதிப்பு இல்லை. குறிப்பாக உயிரிழப்பு ஏதுமில்லை. போக்குவரத்து எங்கும் தடைபடவில்லை. 16 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. 24 குடிசைகள் இடிந்து விழுந்துள்ளன. அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்து வருகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் நாகை மாவட்டம் தோப்புத்துறையில் அதிகபட்ச மழை பதிவாகியுள்ளது. டிட்வா புயல் சென்னைக்குள் வராமல் சென்னையை ஒட்டியே செல்லும் என வானிலை மையம் கூறியுள்ளது.

இன்றும், நாளையும் கடற்கரை பகுதிக்குச் செல்ல வேண்டாம். காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக செல்பி எடுப்பதாக கடற்கரை பகுதிக்கு செல்ல வேண்டாம்.

படகு, பயிர் சேதங்களை கணக்கிடும் பணிகள் நவம்பர் 30-க்கு மேல் நடைபெறும். அதற்கு வேண்டிய நஷ்ட ஈடுகளை முதல்வர் உடனடியாக வழங்க வலியுறுத்தியுள்ளார். முதல்வர் ஒவ்வொரு நகர்வையும் நேரடியாக கவனித்து வருகிறார். புயல் கரையை கடக்கும்வரை வெளியே வரவேண்டாம் என்ற முதல்வரின் அறிவுரையைப் பின்பற்ற வேண்டும். 28 பேரிடர் மீட்புக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளன.

மேலும் 10 குழுக்கள் பிற மாநிலங்களில் இருந்து விமானம் மூலம் வரவழைக்க உள்ளோம். விமானப்படை மற்றும் கடலோர காவல் படைக்கும் எச்சரிக்கை அளிக்கப்பட்டுள்ளது. நாளை பாதிப்பை பொறுத்து தேவையான மாவட்டங்களுக்கு கூடுதல் கண்காணிப்பு அலுவலர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எல்லா மாவட்டத்திலும் 6000-க்கும் மேற்பட்ட நிவாரண முகங்கள் தயார் நிலையில் உள்ளன." என்று தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தை புறக்கணிக்கும் பா.ஜ.க. பதில் சொல்லியே ஆக வேண்டும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு

"வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும். மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டே, தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பது சரியா?"

– இவ்வாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் கேள்வியெழுப்பியுள்ளார்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், இன்று காலை 10.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தின் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதனை தொடர்ந்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

"மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டே, தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பது சரியா?

தமிழ்நாட்டின் கோரிக்கைகளை – தேவைகளைக் கடிதங்களாக, நேரில் மனுக்களாக, சட்டமன்றத் தீர்மானங்களாக எடுத்துச் சொல்லியும் காதில் வாங்காமல் இருப்பது நியாயமல்ல.

அதிகமான வரி வருவாயைத் தரும் மாநிலமான தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்வதை மனச்சாட்சியுள்ள யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். உங்கள் வஞ்சனைகளைக் கடந்துதான் நாட்டிலேயே அதிகமான 11.19 வீத பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கிறோம். குட்ட குட்ட குனிய மாட்டோம் நிமிர்ந்து நடைபோடுவோம்.

வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.





# பொகவந்தலாவ இராணிகாடு வீதியில் பாரிய வெடிப்பால் போக்குவரத்துத் தடை

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

பொகவந்தலாவ இராணிகாடு பிரதான வீதியின் நடுப்பகுதியில் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவ கெம்பியன் இராணி காடு பிரதான வீதியில் ஏற்பட்டுள்ள பாரிய வெடிப்பு காரணமாக இராணிகாடு வீதி இன்று சனிகாகிழமை காலையில் இருந்து மூடப்பட்டுள்ளது என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக குறித்த வீதி தாழ்இறங்கியதில் வீதியின் நடுப்பகுதியில் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளமையால் குறித்த வீதியின் ஊடாக பாரிய வாகனங்கள் எதுவும் பயணிக்க முடியாது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த வீதி தாழ்பிறங்கியதன் காரணமாக இராணிகாடு, லொய்னோன், லின்போட், நோத்கோ, ஆல்டி. ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இதேவேளை கெம்பியன் இராணி காடு பிரதான வீதியில் உள்ள பாரிய கற்பாறைகள் சரிந்து விழும் ஆபாயத்தில் காணப்படுகிறது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மண்சரிவில் சிக்குண்ட இராணுவத்தினர் ஐந்து பேரும் உயிருடன் மீட்கப்பட்டனர்!



(க.கிஷாந்தன்)

நோர்டன்பிரிட்ஜ் பகுதியில் பெய்து வரும் இடைவிடாத கனமழையின் விளைவாக, விமலசுரேந்திர அணைக்கட்டு அருகே உள்ள இராணுவ சோதனை சாவடிக்கு முன்பாக ஏற்பட்ட மண் சரிவில் சிக்கியிருந்த ஐந்து இராணுவ வீரர்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்களை லக்சபான இராணுவ முகாமின் மீட்புக் குழுவினர் மீட்டு, டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் என்று நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று, நோர்டன்பிரிட்ஜ் கினிகத்தேன பிரதான வீதியில் ஏற்பட்ட மண்மேடு சரிவின் காரணமாக சோதனைச் சாவடி முழுமையாக மண்ணுக்குள் புதைந்துள்ளது. அப்போது 19 ஆவது இலங்கை தேசிய இராணுவப் படையைச் சேர்ந்த சார்ஜன்ட் மேஜர் ஒருவர் உள்ளடக்கிய ஐந்து பேர் சோதனை சாவடி நிலையத்தில் வழக்கம் போல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் ஐவரும் மண்ணுக்குள் புதைந்துள்ளனர்.

சரிவு ஏற்பட்டதை முதலில் கவனித்த நோர்டன்பிரிட்ஜ் பொலிஸார் உடனடியாக லக்ஷபான இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியைத் தொடர்பு கொண்டனர். தகவல் கிடைத்ததையடுத்து, கட்டளை அதிகாரி உடனடியாக மீட்புக் குழுவுடன் சம்பவ இடத்துக்குச் சென்றார். பின்னர், நோர்டன்பிரிட்ஜ் பொலிஸ் அதிகாரிகளுடன் இணைந்து மண்ணுக்குள் சிக்கியிருந்த வீரர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட ஐந்து பேரும் உடனடியாக டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஐவருக்கும் அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மண் சரிவு காரணமாக நோர்டன் பிரிட்ஜ் கினிகத்தேன பிரதான வீதியில் போக்குவரத்து முற்றிலுமாக முடங்கியுள்ளது என்றும் வீதியில் உள்ள மண்மேட்டை அகற்றும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# இன்று முக்கிய மார்க்கங்களில் சில ரயில் சேவை இடம்பெறும்

அதிதீவிர வானிலை காரணமாக ரயில் போக்குவரத்துக்கு தடைகள் ஏற்பட்டபோதிலும், இன்று சில முக்கிய மார்க்கங்களில் ரயில் சேவைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, மீரிகமவுக்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையே 3 காலை நேரச் சேவைகளும், காலியிலிருந்தும் அளுத்கமையிலிருந்தும் மருதானை வரை 4 சேவைகளும், சிலாபம் மற்றும் நீர்கொழும்பிலிருந்து கொழும்பு வரை 2 சேவைகளும், முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் களனிவெளி மார்க்கத்தில் ஒரு ரயில் சேவையும் இயக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பிரதான பாதையில் கொழும்பு கோட்டைக்கு மீரிகமையில் இருந்து காலை 6 மணிக்கு மெதுவாக செல்லும் ரயில் புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடலோர மார்க்கத்தில் காலியிலிருந்து மருதானைக்கான ரயில் காலை 6 மணிக்கும், அலுத்கமையிலிருந்து மருதானைக்கான ரயில் கள் காலை 5:30, 6:00, 6:30 க்கும் புறப்படவுள்ளன.

புத்தளம் மார்க்கத்தில் சிலாபத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கான ரயில் காலை 6 மணிக்கும் புறப்படவுள்ளதுடன், நீர்கொழும்பிலிருந்து கொழும்பு கோட்டைக்கு காலை 7:30 க்கு புறப்படும்.

மேலும், களனிவெளி மார்க்கத்தில் அவிசாவளையிலிருந்து கொழும்பு கோட்டைக்கான ரயில் காலை 5:55 க்கு புறப்படும்.

இருப்பினும், காலநிலையின் மாற்றங்களுக்கேற்ப இந்த ரயில் சேவைகள் மாறுபட வாய்ப்புள்ளதால், பயணிகள் இது குறித்து விழிப்புடன் இருக்குமாறு ரயில்வே திணைக்களம் கோரியுள்ளது.

# பாடசாலைகள் மீள திறக்கும் நடவடிக்கை டிசம்பர் 16 ஆம் திகதி வரை ஒத்திவைப்பு



நாட்டில் பாடசாலைகளை மீள திறக்கும் நடவடிக்கை டிசம்பர் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க களுவெவ அறிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அதி தீவிர வானிலை காரணமாக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி, நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் டிசம்பர் 16ஆம் திகதி வரை தொடர்ச்சியாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

# கம்பளைக்குத் திருமணத்துக்குச் சென்ற பஸ்ஸை தேடுகின்றனர் உறவினர்கள்!

(மஸ்கெலியா நிருபர்)

காசல்ட்ரீ பகுதியில் இருந்து கம்பளை நோக்கி திருமண நிகழ்வுக்கு 30 பேருடன் சென்ற பஸ் தொடர்பில் உறவினர்கள் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

நேற்று இறுதியாக புசல்லாவை இரட்டைபாதை பகுதியில் இருந்து தொடர்பு கொண்ட போது பஸ்ஸின் இரண்டு பக்கங்களிலும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது என்றும் உதவி வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

தொலைபேசிகள் இயங்காததால் என்ன நடந்தது என்பது தொடர்பில் கவலையுடன் காத்திருக்கிறார்கள். இவர்கள் தொடர்பில் தகவல் அறிந்தால் 759974624, 788835980 என்றும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறி கேட்கப்பட்டுள்ளது.



# ஹட்டன் பன்மூர் தோட்டம் வெள்ளத்தில் மூழ்கியது!

(க.கிஷாந்தன்)

ஹட்டன் பன்மூர் தோட்டத்தில் உள்ள நீர்நிலைகள் நிரம்பி வழிந்ததால், அதன் கீழ்பகுதியில் அமைந்துள்ள பல வீடுகள் நேற்று முதல் நீரில் மூழ்கியுள்ளன. இந்த நிலைமையால் பாதிக்கப்பட்ட 08 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 30 பேர் தற்காலிகமாக தோட்டப் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஹட்டன் பகுதியில் மின்சாரம் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது. எந்த தொலைபேசி வலையமைப்பும் செயல்படாத சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் பிற அவசர நிவாரணங்களை வழங்குவது சிரமமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை ஆறுப்பெருக்கெடுத்ததால் கொட்டகலை லொக்கீல் தோட்டத்தின் தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அங்கு வசிக்கும் குடும்பங்கள் தற்காலிகமாகப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்த்துள்ளன என்று தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் மழை தொடர்ந்தும் பெய்துவருவதால் மேலும் பல வீடுகள் பாதிக்கப்பட வாய்ப்புள்து என்று அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.





# மலையகத்தில் சீரற்ற காலநிலையால் 33 குடும்பங்களை சேர்ந்த 119 பேர் பாதிப்பு!

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

மலையகத்தில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக பொகவந்தலாவ பகுதியில் பல வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன. வியாழக்கிழமை இரவு பெய்த கடும் மழை காரணமாக பாரிய கற்பாறை இரண்டு சரிந்து விழுந்தமையால் பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் மேற் பிரிவு தோட்டத்தில் வீடுகள் சேதம் அடைந்துள்ளன. இதேவேளை குறித்த பகுதியில் பாரிய வெடிப்புகள் காணப்பட்டுள்ளன என்று தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேள பொகவந்தலாவ சிங்காரவத்தை தோட்ட பகுதியில் மண்மேடு சரிந்து விழுந்தமையால் 10 குடும்பங்ளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக வீட்டில் உள்ள சில உபகரணங்களும் மண்ணுக்குள் புதையுண்டுள்ளன என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தற்காலிகமாக தோட்ட சிறுவர் பாராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்தோடு பொகவந்தலாவ றொப்கில் தோட்ட பகுதியில் மண்மேடு ஒன்று சரிந்து விழுந்தமையால் 17 குடும்பங்களைச் சேர்ந்த 49பேர் றொப்க்கில் தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை வழங்க குறித்த பிரதேசத்துக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஊடக நோர்வூட் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று பிரதேசத்துக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

அத்தோடு பொகவந்தலாவ பகுதியில் மாத்திரம் 33 குடும்பங்களை சேர்ந்த 119பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக பிரதான வீதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டமையால் போக்குவரத்தை மேற்கொள்ள சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர் ஏந்திச் செல்லும் கேசல்கமுவ ஓயாவின் நீர்மட்டமும் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் கேசகமுவ ஓயாவினை அண்மித்து வாழும் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.









# இரத்தினபுரியில் தொடர் மழையால் மக்களது இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

(மஸ்கெலியா நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ச்சியாக பலத்த மழை பெய்துவரும் நிலையில், பல்வேறு பிரதேசங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. மற்றும் மரம் முறிந்து விழுந்து வீடுகள் சேதமடைந்துள்ளன. மின்சாரம் துண்டிப்பு, போக்குவரத்துத் தடை ஏற்பட்டுள்ளது. மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி காவத்தை பிரதான வீதியில் எல்லேகவத்தை பிரதேசத்தில் மண்மேடுடன் மரம் சரிந்து விழுந்துள்ளது. இரத்தினபுரியில் பல தாழ்நில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இரத்தினபுரி, கொடிகமுவ, முஸ்லிம் பள்ளி வீதி, முத்துவ அங்கமுவ, எலபாத்த, கிரியெல்ல, திமியாவ, கொடவெல ஆகிய பிரதேசங்களே வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. களுகங்கையின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது

இறக்குவானை மாதம்பை ஓடகந்த பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ள தோடு கற்பாறைகள் சரிந்துள்ளன. காவத்தை பிரதேச செயலக பிரிவில் எந்தானை கப்பெல பிரதேசத்தில் 02 வீடுகள் சுவர் இடிந்து விழுந்து சேதமடைந்துள்ளன.

இரத்தினபுரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சிறிபாகம பொலிஸ் பிரிவில் மரம் முறிந்து விழுந்து 03 வீடுகள் சேதமடைந்துள்ளன.

நிவித்திகலபொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாராவத்தை பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தத்தில் 36 குடும்பங்கள் பாராவத்தை வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளன. காவத்தை எந்தானை தேயிலைத் தொழிற்சாலைக்கு அருகில் மண்சரிவு அபாய நிலையில் 08 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேர் உறவினர்களது வீடுகளில் தங்கியுள்ளனர். 09 ஆம் இலக்கத் தோட்ட வீடுகளில் 06 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் உறவினர்கள் வீட்டில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, பலாங்கொடை சீதகல பெரகெட்டிய பிதேசத்தில் 103 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஓபநாயக்க உனுவல மற்றும் வல்லகெட்டிய பிரதேசங்களில் மரம் முறிந்து விழுந்ததால் 02 வீடுகள் சேதமடைந்துள்ளன.

வெலிகபொல பிரதேச செயலக பிரிவில் பனான மற்றும் ஹப்புகஸ்தென்ன பிரதேசங்களில் மண்சரிவு அபாயத்தால் 27 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 15 பேர் பிரஜா சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பலாங்கொடை ராசகல , எரமிட்டிகல பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள மண்சரிவு அபாயத்தால் 17 பேர் உறவிளர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளர்.

இதேவேளை மண்சரிவு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள இடங்களில் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு இரத்தினபுரி மாவட்ட இடர் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.







# சாவகச்சேரி வெள்ள நிலைமை தொடர்பில் இன்று ஆராய்வு!

**(த.சுபேசன்)**


சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் வெள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பில் நகரசபைத் தவிசாளர் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களுடைய பிரதிநிதிகள் இன்று சனிக்கிழமை பார்வையிட்டிருந்தனர்.

அதன் ஓர் அங்கமாக கோவிற்குடியிருப்பு கிராமத்தில் அண்மையில் தூர்வாரப்பட்டஉப்புக்கேணிக்குளசூழலைநகசபைத் தவிசாளர், செயலாளர் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டிருந்தனர்.

மேற்படிக் குளமானது நிறைந்து அந்தப் பகுதியில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ள போதிலும் மேலதிக நீரை கடலுக்கு கடத்துவதற்கான இயற்கையான வழி சட்டவிரோத கட்டடங்களால் தடைப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நகரசபை மற்றும் பிரதேச செயலகம் ஆகியன மேலதிக நீரை கடத்துவதற்கான மாற்று வழிமுறைகளை தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாத்தளை சோமுவின் நூல் சிட்னியில் நாளை வெளியீடு!




**(ஐங்கரன் விக்கினேஸ்வரா)**

மாத்தளை சோமு ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்த நிலையில் அமைதியாக தனது எழுத்துப்பணியை சமூக நோக்கோடு செய்துவருபவர். அவரது இலக்கிய முயற்சிகளின் சிகரமாக மாத்தளை சோமுவின் நூறு சிறுகதைகள் தொகுப்பு நூல் சிட்னியில் வெளியாகிறது.

ஆடை நூல் மானத்தைக் காத்து உயர்த்தும், புத்தக நூல் அறிவை மேம்படுத்தி மனிதனாக்கும் என்பதற்கு மாத்தளை சோமுவின் படைப்புக்கள், புலம்பெயர் தமிழர்களின் அடையாளமாக விளங்குகிறது.

பல்வேறு எழுத்துப் படைப்புகளுக்கு சாகித்திய விருது, தமிழக அரசு விருது உட்பட பல்வேறு விருதுகள் பெற்ற மாத்தளை சோமுவின் “100 சிறுகதைகள்” தொகுப்பு நூல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை சிட்னியில் உள்ள துங்காபி புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழறிஞர் ம.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த இலக்கிய விழாவில் வரவேற்புரையை பத்திரிகையாளர் எஸ்.சுந்தரதாஸ் வழங்குவார். வாழ்த்துரைகளை கலாபூசணம் நா.வை.குமரிவேந்தன், எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா ஆகியோர் வழங்குவர்.

மலையகச் சிறுகதைகள் பற்றிய ஆய்வுரையைப் பிரபல ஒலிபரப்பாளர் இரா.சத்தியநாதனும், தமிழகச் சிறுகதைகள் குறித்து மொழிபெயர்ப்பாளர் திருமதி. கீதா மதிவாணனும், போர்க்காலச் சிறுகதைகள் ஆய்வுரையை நூல் நேசர் நந்தன் தர்மபாலனும், புலம்பெயர் வாழ்வு சிறுகதைகள் பற்றி செல்வன் அகலவன் ஸ்ரீஸ்கந்தராஜனும் உரையாற்றுவர்.

படைப்பாளி மாத்தளை சோமு பதிலுரையை வழங்குவார். நன்றியுரையை எஸ்.வசந்தராஜா அவர்கள் வழங்குவார். இந்நூல் வெளியீட்டு நிகழ்வை திருமதி காந்திமதி தினகரன் தொகுத்து வழங்கவுள்ளார்.



# வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கு முதலில் தேசிய நதிப்படுகை அதிகார சபையை நிறுவுக

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

**(எம்.என்.எம்.யஸீர் அறபாத், ஓட்டமாவடி)**

வெள்ளப் பெருக்கை தடுப்பதோடு, நாட்டிலுள்ள பிரதான நதிகளின் பாதுகாப்பு மற்றும் நீர்வள முகாமைத்துவம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நதிப் படுகைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை அமைக்கப்படவேண்டும்என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அனர்த்த நிலைமை குறித்து நாம் அதிகமாகப் பேச வேண்டியுள்ளது. வெள்ளத்தின் காரணமாகப் பிரச்சினை இப்போது சிக்கலாகிவிட்டது. விவசாயிகளுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. நதிப் படுகைகளைப் பாதுகாப்பதற்காக எங்களிடம் ஒரு வேலைத் திட்டம் இல்லை. ஆகையால், நான் அதனை முன்மொழிகிறேன், நாம் தேசிய மட்டத்தில் இந்த நதிப் படுகைகளைப் பாதுகாப்புக்காக தனியான ஓர் அதிகாரசபையை உருவாக்க வேண்டும்.

இல்லையெனில், இந்தப் பணிகள் பல நிறுவனங்களின் கீழ் பிரிந்திருப்பதால், இந்த நதிப் பள்ளத்தாக்குகளையும் நதிப் படுகைகளையும் பாதுகாக்கும் நடவடிக்கைக்கு யாரும் பொறுப்பாவதில்லை. ஒன்று வனப்பாதுகாப்புத் திணைக்களம், அல்லது வனவிலங்குத் திணைக்களம், அல்லது மகாவலி அதிகாரசபை என பல நிறுவனங்களின் கீழ் வருகின்ற இந்த, நமது புவி மேற்பரப்பில் உள்ள நதிகள் 100 இற்கும் மேல் இருக்கின்றன. ஆனால் இந்த நதிப் பள்ளத்தாக்குகளில், குறிப்பாகக் கீழ் மட்டத்திலும் கீழ் பள்ளத்தாக்குகளிலும் இருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக, அதிக மக்கள் வாழும் குடியிருப்புக்களைக் கொண்ட நதிப் பள்ளத்தாக்குகளாக நாம் அடையாளம் காணும் மஹாவலி கங்கை, மல்வத்து ஓயா, மஹா ஓயா, தெதுரு ஓயா, களனி கங்கை, அத்தனகலு ஓயா, கலா ஓயா, ஜின் கங்கை, நில்வளா கங்கை, கல் ஓயா ஆகியவற்றில் குறைந்தது பத்தையாவது ஒரே நதிப் படுகை பாதுகாப்பு அதிகார சபையாக நியமித்து, அவற்றைப் பற்றி ஏதேனும் நீண்டகாலத் திட்டத்தை ஏற்படுத்த முயற்சித்தால் நல்லது.

இந்த மகாவலி அதிகாரசபை குறித்து, அதன் எதிர்காலம் குறித்து நான் உங்களிடம் கேட்டேன். ஏனென்றால், அது முழுமையாக இரத்து செய்யப்படும் என்று ஒரு பேச்சு அடிபட்டது. நீங்கள் சொன்னீர்கள், சட்ட நடவடிக்கைகள் மற்றும் பல வழக்குகள் நிலுவையில் உள்ளதால், அது அப்படி இரத்து செய்யப்படப் போவதில்லை, நாங்கள் சிறிது காலம் அவற்றை நடத்துகிறோம்.

ஏனென்றால், அப்படி இரத்து செய்யப் போனால், ஒரு பெரிய பிரச்சனை எழும். பல அரசுகள் அவ்வப்போது தங்கள் ஆதரவாளர்களுக்குச் சலுகைகள் வழங்கின என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இதன் மூலம் அப்பாவி விவசாயிக்கு அதிக பலன் கிடைத்ததா என்று கேட்டால், அவ்வளவு பலன் கிடைக்கவில்லை.

ஆனால் இந்த நதிப் பள்ளத்தாக்குகள், குறிப்பாக நதிப் படுகைகளின் பாதுகாப்புக் குறித்து ஒரு தேசிய வேலைத் திட்டம் தேவை. ஏனென்றால், அது குடிநீருக்கும் தேவை, அதேபோல நீர்ப்பாசன நீருக்கும் அந்தப் பிரச்சினை இருக்கிறது. அதனால், இவை அனைத்தையும் பாதுகாப்பதற்காக ஒரு நடவடிக்கைக்குள் நாம் இறங்க வேண்டும் என்று நான் கோருகிறேன்.

இந்த முறை பட்ஜெட்டில் கீழ் மல்வத்து ஓயா திட்டத்திற்கு சுமார் 5,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல, கும்புக்கன் ஓயா மற்றும் இன்னொரு திட்டத்துக்கு வெளிநாட்டு உதவி பெறுவதற்காக முயற்சிக்கிறோம் என்று ஒரு குறிப்பு இருக்கிறது, வேறு நடவடிக்கை பற்றி எதுவும் சொல்லப்படவில்லை.

ஆனால் கடந்த முறை கும்புக்கன் ஓயா திட்டத்தைத் தொடங்கப்படும் என்று ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது கும்புக்கன் ஓயாவுக்கு என்ன ஆகிறது என்பது குறித்து இப்போது எந்தப் பேச்சும் இல்லை.

ஆனால், நேற்று முன்தினமும் நான் பேசியது போல, கும்புக்கன் ஓயாவுக்குக் கீழ் உள்ள மற்றொரு வேலைத் திட்டம் தான் ஹெட ஓயா திட்டம். இந்த ஹெட ஓயா திட்டம் குறித்தும் ஒரு பெரிய பிரச்சினை இருக்கிறது, அது செயல்படுத்தப்பட வேண்டும் என்று. அது குறித்து சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தாலும், அதனால் குறிப்பாக குடிதண்ணீர் வழங்குவதற்காகக் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் தேவைப்படும் நல்ல நீர்ப்பாசன நீர் மட்டுமல்ல, யான் ஓயா திட்டம், அதேபோல முந்தெனியாறு மற்றும் அதோடு ஹெட ஓயா இந்த மூன்றுமே குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இப்போது சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரும் பிரதேசங்களான குச்சவெளி மற்றும் அதனைச் சுற்றியுள்ள திருகோணமலை மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேசம். ஹோட்டல்கள் பல கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால்

தொடர்ச்சி▼

# வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கு முதலில் தேசிய நதிப்படுகை அதிகார சபையை நிறுவுக

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

தொடர்ச்சி▲

அங்கே தண்ணீர் இல்லை, குடிநீரும் இல்லை. அதற்காக யான் ஓயா திட்டத்தை சரியாகச் செயல்படுத்தினால், அதை நாம் வெற்றிகரமாகச் செய்ய முடியும்.

இப்போது முந்தெனியாறு குறித்து ஒரு குறிப்பு வந்துள்ளது. ஆனால் முந்தெனியாறு திட்டத்தில் றூகம், கித்துல் குளங்கள் இரண்டையும் சேர்த்து ஒரு பெரிய குள அமைப்பை உருவாக்க ஒரு திட்டம் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான பணம் இல்லாத ஒரு நிலைமையைத் தான் நாம் பார்க்கிறோம் என்று ஒரு குறிப்பு இருக்கிறது.

ஒவ்வொரு வரவு – செலவுத் திட்டத்திலும் எப்போதும் முந்தெனியாறு பற்றி குறிப்பிடுகிறார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. கும்புக்கன் ஓயா பற்றி குறிப்பிடுகிறார்கள், எதுவும் நடக்கவில்லை. ஹெட ஓயா பற்றிய ஒரு குறிப்பும் இல்லை. ஹெட ஓயா, முந்தெனியாறு மற்றும் யான் ஓயா இவை கிழக்கு மாகாணத்துக்குத் தேவையான இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் மட்டுமல்ல, குடிநீர் திட்டமும் கூட.

இப்போது நிறைய ஹோட்டல்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் ஹோட்டல்களுக்குக் குடிநீருக்காக அவர்கள் மாற்று வழிகளைத் தான் தேட வேண்டியிருக்கிறது. எனவே, இந்த மூன்று திட்டங்கள் குறித்தும் உங்கள் அமைச்சின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று நான் கோருகிறேன்.

அத்தோடு, மற்றொரு முக்கியமான திட்டம் என்னவென்றால், ஜின் நில்வளா. இப்போது இந்த மழை வீழ்ச்சி அதிகமான காலத்தில், ஜின், நில்வளா கங்கைகளின் வெள்ளம் அல்லது அந்த நதிப் பள்ளத்தாக்குகளில் ஏற்படும் சேதங்கள், பயிர்ச் சேதங்கள் குறித்து நாம் இப்போது பேச வேண்டியிருக்கிறது. ஆனால் இதில் வீணாகும் தண்ணீர், அதாவது கடலில் கலக்கும் தண்ணீரை நாம் திசைமாற்ற வேண்டுமானால், ஜின் நில்வளா திசைதிருப்பல் திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டும்.

ஆனால், அதைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. ஆனாலும் ஹம்பந்தோட்டை மாவட்டத்துக்குக் குடி தண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்று பேசுகிறார்கள். எங்கிருந்து குடி தண்ணீரைப் பெறுவது? அங்கே இருக்கும் குளங்கள் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும் என்பது ஒரு மாயை மட்டுமே.

ஆனால் ஜின் நில்வளா திசைதிருப்பல் திட்டம் குறித்து இதற்கு முன் பெரிய குற்றச்சாட்டு இருந்தது. அங்கே 4,000 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், பணம் யாரோ எங்கேயோ இல்லாமல் போய்விட்டது, அல்லது அதை இப்போது கண்டுபிடிக்கவும் இல்லை என்று சொன்னார்கள்.

அது குறித்து ஒரு பெரிய மோசடி நடந்தது என்று பேசப்படுகிறது. அந்த மோசடிகள் குறித்து இப்போது எந்தப் பேச்சும் இல்லை. ஆனால் ஜின் நில்வலா திசைதிருப்பல் திட்டம் குறித்து ஏதேனும் ஒரு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

இப்போது நாம் எப்போதும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவது பற்றிக் கூறும் போது, நேற்று முன்தினமும் நான் பேசினேன், இந்த நில மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் விசேஷ அறிவுள்ள நிறுவனம். அந்த நிறுவனத்துக்கு இந்த வரவு – செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்த 250 மில்லியன் ரூபாவைக் கொண்டு கொழும்பு, கம்பஹா, காலி, அம்பாறை, மன்னார், புத்தளம் போன்ற நகரங்களில் இருக்கும் வெள்ளப் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்காகச் சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன என்று அறிகிறேன்.

ஏற்கனவே பல சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தன. இது மேலும் 250 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது. இது நாம் மத்திய கால வரவு – செலவுத் திட்ட கட்டமைப்பின் உள்ளே இதை வழங்குகிறோம் என்று இருக்கிறது. ஒரு மத்திய கால வேலைத் திட்டமாக இதைப்பற்றி நான் அமைச்சரிடம் கோருகிறேன்.

அமைச்சர்பிமல் ரத்நாயக்கவின் கீழுள்ள நில மீள் நிரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் (UDA) சேர்ந்து, அமைச்சரின் தலைமையில் நிறுவனத் தலைவர்களையும் அழைத்து, இந்த வெள்ளக் கட்டுப்பாடு குறித்து, இந்த மக்கள் நெருக்கடிமிக்க நகர பிரதேசங்களில் ஏற்படும் இந்த வெள்ளக் கட்டுப்பாட்டிற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், இந்த 250 மில்லியன் ரூபாயைப் பயன்படுத்தி அதற்குத் தேவையான சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தயாரித்து, நடவடிக்கை எடுங்கள்.

குறிப்பாக இப்போது அம்பாறை மாவட்டத்தில் இது ஒரு பாரிய பிரச்சினை. மட்டக்களப்பு மாவட்டத்திலும் பெரிய பிரதேசங்கள் இப்போது வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இவற்றுக்கான எல்லாக் காரணிகளையும் நாம் ஆராய்ந்து, தேவையான வடிகால் அமைப்புகளை உருவாக்கி, கடலுடன் கலக்கும் ஆற்றுவாய்களை சீரமைக்க வேண்டும்.

அதனால், நாம் மணலை அகற்றிவிட்டு, தண்ணீரை கடலுக்குச் விரயமாகச் செல்வதை தவிர்க்கும் செயல்பாட்டை நாம் நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியக்கூறு அறிக்கை தேவை. இவற்றைப் பல இடங்களில் பேசினாலும், இவை நடைமுறைக்கு வரப்போவதில்லை.

அத்தோடு, மீண்டும் ஒரு முறை நான் வலியுறுத்துகிறேன். இந்த நதிப் படுகை பாதுகாப்பு அதிகாரசபை என்னும் தேசிய நிறுவனத்தை நிறுவி, இந்த நாட்டில் இருக்கும் நதிகளைப் பாதுகாப்பதற்காக, அவற்றை குடிநீர், நீர்ப்பாசன நீர் போன்ற தேவைகளுக்காக மக்கள் நிரந்தரமாகப் பயன்படுத்தும் வகையில் இது குறித்து ஒரு திட்டத்தை உருவாக்குங்கள்.– என்றார்.

## மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில்

# மின் மாற்றி இயங்காததால் நோயாளிகள் பெரும் அவதி!

(மஸ்கெலியா நிருபர்)

கடந்த இரண்டு நாட்களாக மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கன மழை காரணமாக மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் இரவு வேளையில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தது.

அந்த வேளையில் வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நிலை ஏற்பட்டுள்ளது.

மகப்பேற்று தாய்மார்கள் குழந்தை பிரசவிக்கும் வேளை மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தால் அதற்கு இணையாக மின் மாற்றி இயங்க வேண்டும்.

மின் மாற்றி இயங்காததால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ள வேளையில் வெளிச்சம் இல்லாது கும் இருட்டில் இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் வைத்திய சாலையில் உள்ள“லிப்ற்” இரண்டும் கடந்த பல மாதங்களாக இயங்கவில்லை. ஒரு “லிப்ற்”க்கான மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்திய சாலையில் நான்கு மாடிகள் உள்ளதால் “லிப்ற்”அவசியம் தேவை.

கர்ப்பிணிப் பெண்களை மாடிக்கு கொண்டு செல்லவும் நோயாளிகள் யாராவது மரணம் அடைந்தால் கொண்டு செல்லவும் “லிப்ற்” அவசியம் தேவை.

இது குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுகாதார அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 3 ஆம் உலக நாடுகளில் இருந்து வரும் புலம்பெயர்ந்தோருக்கு நிரந்தரத் தடை

## ட்ரம்ப் அறிவிப்பு



3 ஆம் உலக நாடுகளில் இருந்து புலம்பெயர்வோருக்கு நிரந்தரத் தடை விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் வெள்ளை மாளிகை அருகே உள்ள மெட்ரோ நிலையத்தில் ஆப்கானிஸ்தான் இளைஞர் 2 நாள்களுக்கு முன்பு நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒரு வீரர் இறந்தார். மற்றொரு வீரர் காயமடைந்தார். இதையடுத்து இந்த சம்பவத்தில் ஈடுபட்டு தாக்குதல் நடத்தியவர் மிகப்பெரிய விலையை தரவேண்டி இருக்கும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

அதுமட்டுமல்லாமல், ஆப்கானிஸ்தான் குடிமக்களின் விசா பரிசீலனையையும் அமெரிக்கா உடனடியாக நிறுத்தியது. தாக்குதல் நடத்திய இளைஞர் கடந்த ஜோ பைடன் ஆட்சியில் 2021 ஆம் ஆண்டில் சரியான பரிசோதனை இல்லாமல் அமெரிக்காவுக்குள் நுழைந்தவர் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இதனிடையே அமெரிக்காவுக்கு மூன்றாம் உலக நாடுகளில் இருந்து புலம்பெயர்வோருக்கு நிரந்தரத் தடை விதிக்க அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முந்தைய ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம், லட்சக்கணக்கான மக்களை அமெரிக்காவுக்குள் அனுமதித்ததை நான் திரும்பப் பெற உள்ளேன். அமெரிக்காவுக்கு பயன்படாதோரும், அமெரிக்காவை நேசிக்க முடியாத அனைவரும் வெளியேற்றப்படுவார்கள். அமெரிக்கர் அல்லாதோருக்கு கிடைத்து வரும் அரசு சலுகைகளையும் நான் நிறுத்தப்போகிறேன்.

மூன்றாம் உலக நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு புலம் பெயர விரும்புவோருக்கு நிரந்தரத் தடை விதிக்கப்படும். சட்டவிரோதமாக குடியேறியவர்கள், அங்கீகரிக்கப்படாத ஒப்புதல்கள் மூலம் அமெரிக்காவில் நுழைய இருப்பவர்களைத் தடுக்கவே இந்தத் தடை.““ என்று அவர் தெரிவித்தார்.


அமெரிக்கா, அதன் நட்பு நாடுகள், தொழில்வளர்ச்சி பெற்ற நாடுகள் முதல் உலக நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. ரஷ்யா, சீனாவை சார்ந்த நாடுகள் இரண்டாம் உலக நாடுகள் என்று கூறப்படுகின்றன.

இந்த 2 அணியிலும் இல்லாத, வளர்ந்து வரும் அல்லது பின்தங்கிய ஆப்பிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் என அழைக்கப்படுகின்றன.

தற்போதைய மூன்றாம் உலக நாடுகள் பட்டியலில் ஆப்கானிஸ்தான், ஈரான், மியான்மர், காங்கோ, கியூபா, எரித்திரியா, ஹைதி, வெனிசுலா, சோமாலியா, சூடான் உள்ளிட்ட சில நாடுகள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# இம்ரான் கான் உயிரோடிருப்பதற்கான ஆதாரங்களை உடன் வெளியிடுங்கள்

## பாக். சிறை நிர்வாகத்துக்கு மகன் காசிம் கான் வலியுறுத்தல்





சிறையில் எனது தந்தை இம்ரான் கான் உயிரோடு இருக்கிறார் என்பதற்கு ஆதாரங்களை வெளியிட வேண்டும் என்று அவரது மகன் காசிம் கான் வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், பல்வேறு வழக்குகள் தொடர்பாக தண்டனை விதிக்கப்பட்டு ராவல்பிண்டி அடியாலா மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். நீதிமன்ற உத்தரவின்படி இம்ரானின் குடும்பத்தினர் அவரை அவ்வப்போது சந்தித்து வந்தனர். இந்நிலையில், கடந்த ஒரு மாதமாக சிறையில் அவரை சந்திக்க நிர்வாகம் அனுமதிக்கவில்லை. இதற்கிடையில், சிறையில் இம்ரானைஇ ராணுவம் கொன்றுவிட்டதாக தகவல் பரவியது.

இதையடுத்து 2 நாள்களுக்கு முன் சிறைக்கு வெளியில் இம்ரான் கானின் சகோதரிகள் 3 பேர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் மீது பொலிஸ் கடும் தாக்குதல் நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்நிலையில், இம்ரானின் மகன் காசிம் கான் நேற்று தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“எனது தந்தை உயிரோடு இருக்கிறார் என்றால், அதற்கான ஆதாரங்களை வெளியிட வேண்டும். கடந்த ஒரு மாதமாக அவரை சந்திக்க எங்களை அனுமதிக்காதது ஏன்? மனிதாபிமானமில்லாமல் அவரை தனிமைப்படுத்தி வைத்திருப்பது சரியல்ல. இது சட்டவிரோதமானது. கடந்த 845 நாள்களாக எனது தந்தை சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார். கடந்த ஒரு மாதமாக அவரை யாரும் தொடர்பு கொள்ள முடியவில்லை. நீதிமன்ற உத்தரவு இருந்தும், அவரை சந்திக்க அனுமதிக்காதது ஏன்? தொலைபேசியில் பேச முடியவில்லை.

எங்களது தந்தையின் பாதுகாப்பு, உடல்நலம் எல்லாவற்றுக்கும் பாகிஸ்தான் அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். இந்த விவகாரத்தில் சர்வதேச நாடுகளும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் தலையிட்டு, எனது தந்தையின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.”என்று குறிப்பிட்டுள்ளார்.

# சென்னைக்கு தெற்காக மையம் கொண்ட ‘டித்வா’



சென்னைக்கு தெற்கே 400 கிலோ மீற்றர் தொலைவிலும், காரைக்காலுக்கு தெற்கு-தென்கிழக்கே 190 கிலோ மீற்றர் தொலைவிலும் உள்ள டித்வா புயல், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திரப் பிரதேச கடற்பகுதியை நாளை அதிகாலை அடையும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“இலங்கையின் கடலோர பகுதியிலும், அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடலிலும் உருவான டித்வா புயல், கடந்த 6 மணி நேரத்தில் 8 கிலோ மீற்றர் வேகத்தில் வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது.

காலை 5.30 மணி நிலவரப்படி இந்த புயல், இலங்கையின் யாழ்ப்பாணத்துக்கு கிழக்கு-தென்கிழக்கே 80 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டுள்ளது. மேலும், காரைக்காலுக்கு தெற்கு-தென்கிழக்கே 190 கிலோ மீற்றர் தொலைவிலும், புதுச்சேரிக்கு தெற்கு-தென்கிழக்கே 300 கிலோ மீற்றர் தொலைவிலும், சென்னைக்கு தெற்கே 400 கிலோ மீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

இது தொடர்ந்து வடக்கு-வடமேற்கில் நகர்ந்து நாளை அதிகாலை வட தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திரப் பிரதேச கடற்பகுதியை அடையும்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹாங்கொங் தீ விபத்தில் சிக்கி பலியானோர் 128 ஆக உயர்வு

ஹாங்கொங் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 128 ஆக அதிகரித்துள்ளது.

ஹாங்கொங்கின் டய் போ பகுதியில் உள்ள வாங் பக் கோர்ட் வளாகத்தில் 8 அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் 31 மாடிகள் உள்ளதால் அங்கு 2,000-க்கும் மேற்பட்ட வீடுகள் இருந்தன. இங்கு பராமரிப்பு பணிக்காக கட்டிடங்களை சுற்றி சாரங்கள் அமைக்கப்பட்டு தார் பாலின் மூலம் மறைக்கப்பட்டிருந்தன. இதனால் இங்கு ஒரு இடத்தில் பற்றிய தீ 7 கட்டிடங்களுக்கு மளமளவென பரவியது.

இதில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 128 ஆக அதிகரித்துள்ளது. 79 பேர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். சுமார் 200 பேரை காணவில்லை. இந்த கட்டிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட 900 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்ட கட்டிடங்களைச் சுற்றி 1000 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில்



தீ விபத்து சம்பவம் குறித்து பாதுகாப்பு செயலாளர் கிரிஸ் டாங்க் நேற்று அளித்த பேட்டியில்,

‘கட்டடங்களில் தீ முழுவதுமாக அணைக்கப்பட்டுள்ளது. இங்கு தேடுதல் பணிகளும் நிறைவடைந்துவிட்டன. இறந்தவர்களின் உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெறுவதால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம். கட்டடத்தில் வெப்ப நிலை குறைந்ததும், அங்கு பொலிஸார் சென்று தீ விபத்துக்கான ஆதாரங்களை சேகரிப்பர். தீ விபத்து ஏற்பட்ட போது கட்டடங்களில் பொருத்தப்பட்டிருந்த தீ எச்சரிக்கை கருவிகள் வேலை செய்யவில்லை என தெரியவந்துள்ளது.’ என்று தெரிவித்துள்ளார்.

கனடா முரசு
சனிக்கிழமை | 29/11/2025

**கனடாவில் 30,000 டொலர் மதிப்புள்ள சன்கிளாஸ்களை களவாடிய பெண்கள்**




02



# அமெரிக்காவின் கடுமையான வரிகளால் கனடாவின் பொருளாதாரத்துக்கு பாதிப்பு

## பிரதமர் மார்க் கார்னி விசனம்

அமெரிக்காவின் கடுமையான வரி களால் கனடா பொருளாதாரத்திற்கு பெரும் இழப்பு ஏற்படவுள்ளது எனவும் அமெரிக்கா விதித்துள்ள புதிய வரி காரணமாக, கனடாவின் பொருளாதாரம் 50 பில்லியன் டொலர் அளவிற்கு பாதிக் கப்படும் என்றும் கனடா பிரதமர் மார்க் கார்னி, எச்சரித்துள்ளார்.

அமெரிக்கா சமீபத்தில் கனடாவின் முக்கிய ஏற்றுமதி பொருள்கள் மீது அதிக வரி விதித்துள்ளது. குறிப்பாக, தொழில்நுட்பம், வாகன உற்பத்தி, எரிசக்தி, வேளாண்மை போன்ற துறை கள் நேரடியாக பாதிக்கப்பட உள்ளன. இதனால், கனடாவின் உள்நாட்டு உற்பத்தி மதிப்பு குறையக்கூடும் என அரசு கணித்துள்ளது.

03





# கனடாவில் விபத்தில் உயிரிழந்தார் எனக் கூறப்பட்ட இந்திய யுவதி உண்மையில் கொலையுண்டாராம்!

## கனேடியப் பொலிஸார் திடுக்கிடும் தகவல்

கனடாவில் இந்திய இளம்பெண் ஒருவர் விபத்தொன்றில் பலியான நிலையில், உண்மையில் அது விபத்து அல்ல, கொலை என்பதாக் தெரியவந்துள்ளதால் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

பஞ்சாபிலுள்ள Gujjarwal என்னுமிடத்தைச் சேர்ந்த மன்தீப் கௌர் க்ரேவால் (வயது30) என்னும் இளம்பெண் கனடாவில் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெற்று வாழ்ந்துவந்தார்.

கடந்த மார்ச் மாதம் மன்தீப்புக்கு அன்மோல் ஜீத் சிங் என்பவருடன் திருமணமாக, இருவருமாக பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள டெல்டா என்னுமிடத்தில் வாழ்ந்துவந்தார்கள்.

இந்நிலையில், சென்ற மாதம், அதாவது, அக்டோபர் மாதம் 26ஆம் திகதி, மன்தீப் பயணித்த கார் விபத்தொன்றில் சிக்கி தீப்பிடித்து எரிந்தது.

அந்த விபத்தில் மன்தீப் பலியானார் என்ச் இந்தியாவிலிருக்கும் அவரது உறவினர்களுக்கு தகவலளிக்கப்பட, அவரது குடும்பத்தினர்

03






# கனடாவில் 30,000 டொலர் மதிப்புள்ள சன்கிளாஸ்களை களவாடிய பெண்கள்

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் 30 ஆயிரம் டொலர் பெறுமதியான டிசைனர் சன்கிளாஸ்கள் திருடிய பெண் ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஒன்டாரியாவின் பிகரிங் நகரின் ஒரு மோலில் இருந்தே 30,000டொலர் மதிப்புள்ள டிசைனர் சன்கிளாஸ்கள் திருடப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில், டொரண்டோவைச் சேர்ந்த ஒரு பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பிகரிங் சிட்டி சென்டர் மோலில் உள்ள லென்ஸ் கிராப்ட்ஸ் விற்பனையகத்திற்கு மூன்று பெண்கள் நுழைந்து, 60-க்கும் மேற்பட்ட விலையுயர்ந்த டிசைனர் கண்ணாடிகளை சுருட்டியுள்ளனர்.

காவல்துறையினர் பின்னர் மூன்று சந்தேகநபர்களில் இருவரை அடையாளம் கண்டுள்ளனர்.


அதன்படி, ஒக்டோபர் 26 அன்று டொரண்டோவில் டுன்டாஸ் மேற்கு வீதி மற்றும் ஸ்கார்லெட் வீதி பகுதியிலுள்ள ஒரு வீட்டில் சோதனை நடத்தப்பட்டு, 25,000 டொலருக்கும் மேற்பட்ட திருடப்பட்ட பொருஒகள் மீட்கப்பட்டன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 33 வயதான கரோலின் வெனிசா வோல்கர் என்பரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஏனயை சந்தேக நபர்கள் தாங்களாகவே சரணடைய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பிரிட்டனுக்குப் பயணிக்கும் கனேடியர்கள் இனிமேல் பயண அனுமதி பெற வேண்டும்




பிரித்தானியாவுக்கு பயணிக்கும் கனேடியர்கள், பயண அனுமதி இல்லாமல் இனி பிரித்தானியாவுக்குள் சட்டப்படி நுழையமுடியாது.

பிரித்தானியாவுக்குப் பயணிக்கும் கனேடியர்கள், 2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ஆம் திகதி முதல், Electronic Travel Authorization (ETA) என்னும் அனுமதியை முன்கூட்டியே என பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த ETA என்னும் பயண அனுமதி பெறுவதற்கான கட்டணம் 30 கனேடிய டொலர்கள் ஆகும்.

இந்த பயண அனுமதியை, U.K. eTA app என்னும் அப் அல்லது ஒன்லைன் மூலம் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இன்னொரு விடயம் என்னவென்றால், இந்த விதி இரட்டைக் குடியுரிமை கொண்ட கனேடியர்களுக்கு பொருந்தாது. அதாவது, கனேடிய, பிரித்தானிய இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களுக்கு வேறு விதி.

அவர்கள் பிரித்தானியாவுக்குள் நுழைய, பிரித்தானிய பாஸ்போர்ட் அல்லது certificate of entitlement என்னும் ஆவணத்தை வைத்திருக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.




# குற்றங்களுடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் குழு கைது

கனடாவின் ஒன்றாரியோவின் எட்மான்டனில் குற்றங்களுடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் கும்பலொன்றை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஒன்றாண்டு காலணமாக மேற்கொள்ளப்பட்ட நீடித்த விசாரணைக்குப் பின்னர் இந்தக் கும்பலை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

வன் ஓடர் மோட்டார் சைக்கிள் கிளப் என்ற இந்த கும்பலை முற்றிலும் கலைத்து, அதன் பல உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுகளை பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணை 2024 ஒக்டோபரில் தொடங்கப்பட்டது.

விசாரணையில், இந்த கும்பல் மீது துப்பாக்கி கடத்தல், துப்பாக்கி கடத்த சதி, மிரட்டல், கொள்ளை, தாக்குதல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் பங்கு ஆகிய பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தக் கும்பலுக்கு பீல், டொரான்டோ மற்றும் ஹாலி:.பாக்ஸ் பகுதிகளில் கிளைகள் உள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கும்பல் தொடர்பில் சுமார் 200க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை நடத்தினர் என தெரிவிக்கப்படுகின்றது.

எட்மன்டன், ஷெர்வுட் பார்க், ஆர்ட்ரோசன், அல்பர்டா பீச் மற்றும் பிரிட்டிஸ் கொலம்பியாவின் பல பகுதிகளிலும் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.சந்தேக நபர்களிடமிருந்து 19 துப் பாக்கிகள், பல தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் நகல் ஆயுதங்கள், துப்பாகி ரவைகள், 2 குண்டு எதிர்ப்பு ஜாக்கெட்டுகள், 50,000 கடத்தல் சிகரெட்டுகள், 118,000 டொலர் பணம் உள்ளிட்ட பல பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிர்ச்சியிலும் துயரத்திலும் ஆழ்ந்துள்ளனர்.

ஆனால், பொலிஸாருக்கு அந்த விபத்து குறித்து சந்தேகம் ஏற்படவே, அவர்கள் பெரிய அளவில் விசாரணை ஒன்றைத் துவக்கியுள்ளார்கள்.

விசாரணையைத் தொடர்ந்து அதிர்ச்சியளிக்கும் ஒரு செய்தி கிடைத்துள்ளது. அதாவது, மன்தீப் விபத்தில் உயிரிழக்கவில்லை, அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதுதான் அந்த செய்தி.

அத்துடன், மன்தீப்பைக் கொலை செய்தார் என மன்தீப்பின் கணவரான அன்மோல் ஜீத் சிங்கின் சகோதரரான குர்ஜோத் சிங் கைரா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்கள் மகள் விபத்தில் உயிரிழந்தார் எனக் கிடைத்த செய்தியால் சோகத்தில் ஆழ்ந்திருந்த மன்தீப்பின் பெற்றோர், தற்போது தங்கள் மகள் கொலை செய்யப்பட்டார் எனக் கிடைத்துள்ள செய்தியால் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

அத்துடன், மன்தீப்பை கைரா எதற்காக கொலை செய்தார் என்பதும் புரியாமல் இரு குடும்பத்தினரும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள கைரா, டிசம்பர் மாதம் 11ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளார்.

## அமெரிக்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“இந்த வரி கனடாவின் தொழிலாளர்கள், குடும்பங்கள், நிறுவனங்கள் அனைவருக்கும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். நமது பொருளாதாரத்தில் 50 பில்லியன் டொலர் இழப்பு ஏற்படும். இதை சமாளிக்க, கனடா அரசு விரைவில் மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்” என பிரதமர் கார்னி கூறியுள்ளார்.

அவர் மேலும், கனடா - அமெரிக்கா வர்த்தக உறவுகள் பல ஆண்டுகளாக வலுவாக இருந்தாலும், இத்தகைய வரிகள் இரு நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பை பாதிக்கும் அபாயம் உள்ளது என எச்சரித்துள்ளார்.

இந்த சவாலுக்கு எதிராக புதிய வர்த்தக கூட்டாளிகளை தேடுவதோடு, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டங்களை விரைவில் கனடா அறிவிக்க உள்ளது.

அதேசமயம், அமெரிக்காவுடன் பேச்சு நடத்தி, வரி சுமையை குறைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு, கனடா மக்களிடையே பெரும் கவலை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் மற்றும் சிறு, நடுத்தர நிறுவனங்கள் அதிகளவில் பாதிக்கப்படக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.